**அக்டோபர் - 26**

**"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்." - 1பேது 5 : 7.**

இது நமக்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து கிடைக்கிற மிகவும் ஆற்றித் தேற்றுகிறதும் உற்சாகப்படுத்துகிறதுமான ஒரு யோசனையாயிருக்கிறது. தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினராயிருக்கும் வருஷங்களும் செல்லச் செல்லத் தங்களுடைய ஞானத்திற்கு ஏற்றவாறு தங்களுடைய முயற்சிகளை செயல்படுத்தக் கர்த்தரைக் கேட்கக்கூடாது என்றும், தங்களுடைய சித்தங்கள் பூமியிலோ அல்லது பரமண்டலத்திலோ செய்யப்பட வேண்டுமென்று கேட்கக்கூடாது என்றும், ஆனால் தங்களுடைய பெரிதும், சிறிதுமான பாரங்களைப் பற்றிக் கர்த்தரிடம் சொல்லி அவருடைய அனுதாபத்தையும், அன்பையும் உணர்ந்து அவைகளைத் தங்களுக்கு உரிதாக்கிக் கொள்ளவும், அவரில் தங்களுடைய நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் உறுதியாக இருந்தால், தங்களுடைய எல்லா அனுபவங்களையும் தங்களுக்கு லாபகரமாகத் திறமையுள்ளவரும் இஷ்டமுள்ளவருமாயிருக்கிறார் என்ற அவருடைய வார்த்தையின் உறுதிமொழிகளைத் தங்களுடைய சொந்த இதயங்களுக்கு ஒரு வலி போக்கும் விதமாக உபயோகப்படுத்தவும் கர்த்தருடைய ஜனங்கள் அதிகதிகமாக தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். **- Z ’04, 237 (R 3407)**

நஷ்டங்கள், ஏமாற்றங்கள், தாமதங்கள், தடைகள், தள்ளிப்போடப்பட்ட காரியங்கள், பொறுப்புகள், குற்றங்கள், குறைவுகள் நம்முடையதும், மற்றவர்களுடையதுமான பலவீனங்கள், தோல்விகள், பேதங்கள், கஷ்டங்கள், பிளவுகள், கொழித்தல், தேவைகள், எதிர்ப்புகள், வியாதி, களைப்பு, வருத்தம், துக்கம், சதி, கொடுமைகள், துன்பப்படுத்துதல் முதலியன போன்ற நம்மை சோதிக்கின்ற காரியங்களே நம்முடைய கவலைகள். நம்முடைய இருதயத்தின் மனதின் கவனத்தைக் கிரகித்துக் கொண்டு, வியாகூலத்தை உண்டுபண்ணுவதே இவைகளின் இயற்கையான போக்காயிருக்கிறது. எல்லாக் காரியங்களும் நம்மையே சார்ந்திருக்கிறது போல செயல்பட்டு, நம்முடைய விவகாரங்கள் மெச்சத்தக்க விதமாக ஜாக்கிரதையும், உழைப்புமுள்ளவர்களாயிருக்கும் பொழுது, எல்லாம் தேவனைச் சார்ந்திருக்கிறதென்று நாம் மனப்பூர்வமாய் நம்புவோமாக. ஜாக்கிரதையும், உழைப்புமுள்ளவர்களாயிருக்க வேண்டியது நம்முடையது. கவலைப்பட வேண்டியது அவருடையது. அவர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிருக்கிறார். நம்முடைய சகாயராகவும், நம்மைக் கவனித்துக் கொள்கிறவராகவும் இருந்து எல்லாக் காரியங்களையும் ஏற்பாடு செய்கிறார். ஆகையால், நம்முடைய பாக்கியங்களை அவரிடம் நன்றாக ஒப்படைக்கலாம். **- P ’33, 148.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 37:5; 127:2; மத் 6:25-34; 11:28-30; 13:22; லூக் 21:34; ரோம 8:28; பிலி 4:6,7,19; நீதி 16:3; எரே 17:7,8; எபி 13:5.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 230 (R 5508)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் கவலையைப் பற்றி நான் என்ன செய்தேன்? எப்படி? ஏன்? பலன் என்ன?**